***பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு***

## இரண்டாவது திருவழிபாடு ஆண்டு

## 2024-05-05

(*இன்றைய வாசகங்கள்:*

*திருத்துதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்.* 10:25-26, 34-35, 44-48,

*பதிலுரைப்பாடல் திபா.*98: 1. 2-3ab. 3cd-4 (*பல்லவி:* 2b),

*திருத்தூதர் யோவான் எழுதிய முதல் திருமுகத்திலிருந்து வாசகம்.* 4:7-10,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 15: 9-17)

*திருப்பலி முன்னுரை*

*இறைவனின் அன்பர்களே, இறைமகன் இயேசுவின் பெயரால், பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் அன்போடு வரவேற்கிறோம். நாம் இறைவனின் அன்பில் நிலைத்திருக்க இன்றைய திருவழிபாடு நம்மை அழைக்கிறது. இயேசு தந்தையின் அன்பில் நிலைத்திருப்பதுபோல, இயேசுவின் கட்டளைகளை கடைபிடித்து அவருடைய அன்பில் நிலைத்திருக்க நாம் அழைக்கப்படுகிறோம். இயேசுவில் இணைந்திருந்து, ஒருவர் மற்ற வரை அன்புசெய்து வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்பு தந்தையாம் இறைவா!*

*உம்மால் திருஅவையின் பணிகளுக்காக தேர்ந்து கொள்ளப்பட்ட திருப்பணியாளர்கள் அனைவரும் இறையாட்சியின் மதிப்பீடுகளுக்கு ஏற்ப திருஅவையை வழிநடத்த வேண்டிய மனநிலையைக் கொடுத்தருள வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*தந்தையாம் இறைவா!*

*நாட்டுத் தலைவர்கள் அனைவரும் ஜாதி, இன, மொழி, உயர்ந்தவன், தாழ்ந்தவன், ஏழை- பணக்காரன் என்ற பாகுபாடுகளைக் களைந்து அனைவரும் சமம் என்ற மேலான கண்ணோட்டத்தோடு மக்களை பார்க்க வழிநடத்த உம் ஞானத்தால் நிரப்ப வேண்டுமென்று இறைவா உம்மிடம் மன்றாடுகின்றோம்.*

*அன்பின் இறைவா!*

*இந்த உலகில் ஆறுதலின்றி கருணை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், குழந்தைகள் காப்பகம் ஆகிய இடங்களில் அன்பிற்காக ஏங்கி நிற்கும் உள்ளங்களுக்கு ஆறுதலையும், தேறுதலையும், உற்சாகத்தையும் நல் சுகத்தையும் கொடுத்து, அரவணைத்து காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மிடம் மன்றாடுகின்றோம்.*

*உறவின் வடிவமே இறைவா!*

*உலகில் அன்பின்மையால் உருவாகியுள்ள அனைத்து தீமைகளும் முடிவுக்கு வரவும், இறையன்பும் பிறரன்பும் மக்களிடையே வளர்ச்சி காணவும், துன்பங்கள் நீங்கி மகிழ்ச்சி பிறக்கவும் உதவ வேண்டுமென்று உம்மைத் தாழ்மையுடன் மன்றாடுகிறோம்.*

*அமைதியின் இறைவா!*

*உலகில் தீய செயல்களினால் அமைதி இழந்து, மக்கள் வாழ்கின்றனர். நீர் வழங்கும் அமைதி அனைத்து மக்களிடையேயும் தங்க வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*தோழமையின் நாயகனே இறைவா!*

*எங்கள் வாழ்க்கையில் வெறும் வெளி அடையாளங்களைத் தனித்து ஆடம்பரங்களைக் குறைத்து, ஆன்மீகத் தயாரிப்பில் எங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டிய வரம்தர வேண்டுமென்று மன்றாடுகிறோம்.*

*அமைதியின் தேவனே இறைவா!*

*இயேசு தம் சீடருக்கு வழங்கிய அதே அமைதியை நாங்கள் ஒவ்வொருவரும், மற்றும் உலக மக்கள் ஒவ்வொருவரும் பெற்று மகிழ்ந்திடவும் அனைத்துக் குடும்பங்களிலும் அமைதி, ஒற்றுமை வளர்ந்தோங்கிடவும் வரம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*ஆயனின் கட்டளையை கடைபிடிப்போரிடம் அன்பு நிறைவடைகிறது என உணர்த்தும் ஆயனே!*

*கடுமையான வார்த்தைகளைப் பேசியதால் மனம் புண்ணாகி அவமானமாக இருக்கிறது. பல்வேறு தொல்லைகள் என்னைப் புண்ணாக்கி வேதனையால் நொந்து போகச் செய்துவிட்டது என மனம் வருந்தும் உள்ளத்தினரை அன்பு நிறைந்த வார்த்தையால் அரவணைக்கவும், உமது திருக்காயங்களுக்குள் பாதுகாப்பாக அவர்கள் வாழவும் அருள் பொழிய, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*